செ.வெ.எண்: 24 /மே / 2021 நாள்:11.05.2021

**திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுலகக் கூட்டரங்கில் சுகாதாரத்துறை, வருவாய் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சித்துறை ஆகிய துறை அலுவலர்களுடன் கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்புப் பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் கூடுதல் தலைமைச் செயலர் /வருவாய் நிர்வாக ஆணையர் திரு.க.பணீந்திர ரெட்டி.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (11.05.2021) நடைபெற்றது.**

-------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று இரண்டாவது அலையை கட்டுப்படுத்துவது தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலர் /வருவாய் நிர்வாக ஆணையர் திரு.க.பணீந்திர ரெட்டி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது :

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று சிகிச்சை அளிப்பதற்காக தனிமைப்படுத்தப்பட்ட சிறப்பு மருத்துவ முகாம் (கோவிட் கேர்) சேதுராபட்டி அரசு பொறியியல் கல்லூரி, ஸ்ரீரங்கம் யாத்ரீக நிவாஸ், காஜாமலை பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரி, புத்தனாம்பட்டி நேரு நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இனாம் குளத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம், திருச்சிராப்பள்ளி மண்டல ரயில்வே பயிற்சி நிலையம், நவலூர் குட்டப்பட்டு சட்டக்கல்லூரி, திருவெறும்பூர் துப்பாக்கி தொழிற்சாலை பாரத மிகுமின் நிலைய பயிற்சி நிறுவனம் (பி.எச்.இ.எல்.,) ஆகிய இடங்களில் தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு கொரோனா வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தனியார் நிறுவனமான அப்பலோ மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவ முகாமாக (CCC Center) மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், கொரோனா வைரஸ் நோய் தாக்கம் தினமும் அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு குறிஞ்சி பொறியியல் கல்லூரி மற்றும் குமுளூர் வேளாண் பல்கலைக்கழகத்திலும் படுக்கை வசதிகள் தயார் நிலையில் உள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தொடர்பாக இதுவரை 30,276 நபர்களுக்கு தொற்று கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதில் 25,330 நபர்கள் பூரண குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இதுவரை கோவாக்சின் மற்றும் கோவிட் சீல்ட் தடுப்பூசியை 2,33,477 நபர்கள் போட்டுக்கொண்டுள்ளனர். மாவட்டத்தில் கொரோனா

வைரஸ் நோய் தொற்று தொடர்பாக இதுவரை 5,33,276 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களின் விபரம் மற்றும் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட நபர்களின் விபரம் குறித்தும் விரிவாக ஆய்வு செய்தார். ஊரக வளர்ச்சித்துறை, சுகாதாரத்துறை, காவல்துறை ஆகிய துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து கொரோனா வைரஸ் நோய் தடுப்புப் பணியில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியும், சிறப்பாக பணி செய்தும் கொரோனா வைரயை கட்டுப்படுத்த வேண்டும்.

பொதுமக்கள் முகக்கவசம் அணிய வேண்டும். சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். கைகளை அடிக்கடி சோப்பு போட்டு சுத்தமாக கழுவ வேண்டும். வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களை தூய்மையாகப் பராமரிக்கப்படுவதை உள்ளாட்சித்துறையினர் கண்காணிக்க வேண்டும். திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனை, மணப்பாறை அரசு மருத்துவமனை ஆகிய அரசு மருத்துவமனைகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆக்ஸிஜனுடன் கூடிய படுக்கை வசதிகளையும், தனியார் மருத்துவமனைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஆக்ஸிஜன் படுக்கை வசதிகள் எண்ணிக்கை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. மேலும், அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் ஆக்ஸிஜன் கையிருப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டு ஆக்ஸிஜன் இருப்பு உள்ளதை உறுதி செய்ய வேண்டும் என சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இவ்வாறு கூடுதல் தலைமைச் செயலர் /வருவாய் நிர்வாக ஆணையர் திரு.க.பணீந்திர ரெட்டி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து பெரிய மிளகுபாறையில் ரெம்டெசிவிர் மருந்துகள் வழங்கும் கட்டுப்பாட்டு அறையில் பொதுமக்களுக்கு மருந்துகள் வழங்கப்படுவதையும், கோ-அபிஷேகபுரம் கோட்டம், உறையூர் வார சந்தையையும் நேரடியாக ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.மயில்வாகணன், காவல் துணை ஆணையர் திரு.யு.பவன்குமார்ரெட்டி,இ.கா.ப. மாநகராட்சி ஆணையர் திரு.சிவசுப்ரமணியன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.பழனிகுமார், இணை இயக்குநர் (சுகாதாரம் மற்றும் குடும்பநலம்) டாக்டர் லெட்சுமி, துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் டாக்டர் ராம்கணேஷ், கி.ஆ.பெ.அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் வனிதா, துணை ஆட்சியர் பயிற்சி செல்வி.பவித்ரா, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருமதி உமாமகேஸ்வரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருச்சிராப்பள்ளி.**